## தம்புள்ளை பிரதேச சபை - 2024

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 (ஆ) பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 06 கொள்வனவுகள் மற்றும் நிர்மாணங்களுக்காக ஏற்பட்ட மொத்த செலவினமான ரூபா. 1,557,818 மூலதனமாக்கப்படவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் காரணமாக உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரின் அறிக்கைக்கு அமைவாக தம்புள்ளை பிரதேச சபையின் மூலம் தம்புள்ளை மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,486,917 எனக் காட்டப் பட்டிருந்த போதும் ரூபா. 2,806,009 மாநகர சபையிடமிருந்து பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானமொன்றாக கருதப்பட்டு தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதேச சபையால் பயன்படுத்தப் படுகின்ற ரூபா 1,282,400 பெறுமதிபான வேவல பொதுச் சந்தை அமைந்துள்ள, காணி மற்றும் கட்டிடம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விடயத்தை ஆராய்ந்து சீர் செய்வதாக. | - மேற்படி - |
| (ஈ) | இனாமலுவ சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் வேலி மற்றும் நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,000,000 தொகை 140 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கையில் 89 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் மீண்டும் ரூபா 3,000,000 கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததால் கடன் கொடுத்தோர் ரூபா 3,000,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 இற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள 08 கணக்கு விடயங்களின் மீதிகளை அவற்றுடன் தொடர்பான அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்யும் பொழுது ரூபா. 105,653,583 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | அட்டவணைகளில் பிழைகள் காணப்படுவதுடன் அவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள், அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 12,998,643 ஆகவிருந்த 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 1,652,373 ஆகவிருந்த பொறுப்பு மீதியொன்று ஆகியவற்றுடன் தொடர்பான அட்டவணைகள் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | கோவைகளை ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளுடன் தொடர்பான பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் ஆகியன தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்அ**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி 104 (4) | 2019 – 2024 காலப் பகுதியில் இடம்பெற்ற 04 வாகன விபத்துக்கள் தொடர்பான உரிய பரிசோதனை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | பரிசோதனை நடவடிக்கை களை விரைவில் பூர்த்தி செய்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி 571(3) | 2014 – 2024 வரையான காலவீச்சுக்குரிய காலாவதியான ரூபா 4,575,359 ஆன 47 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,352,028 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 49,949,089 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகை | 7,920,000 | 3,672,481 | 3,672,482 | 2,161,138 | 22,265,000 | 5,167,977 | 4,591,342 | 2,161,139 |
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 21,291,000 | 17,754,877 | 9,320,328 | 9,114,999 | 18,102,500 | 13,723,014 | 14,478,258 | 680,450 |
| (iii) | ஏனைய வருமானம | 28,505,500 | 36,957,007 | 42,123,480 | 28,316,447 | 34,845,248 | 114,722,678 | 138,816,474 | 33,482,920 |
| | மொத்தம் | 57,716,500 | 58,384,365 | 55,116,290 | 39,592,584 | 75,212,748 | 133,613,669 | 157,886,074 | 36,324,509 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்க ளாக பெயரிட்டு உரிய அங்கீகாரத்தை பெற்று வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் பெயரிட்டு வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு வாகன நிறுத்துமிடங்களில் வாடகை நிலுவை ரூபா 2,161,138 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. | எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நன்மைகளை அடையத் தவறுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மிகை நிதியை வருமானம் ஈட்டும் திட்டங்கள், சபை சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்குவதற்கான செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 74,861,518 தொகையை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா. 38,267,793 தொகை நடைமுறைக் கணக்கில் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | 2025 ஆம் ஆண்டில் நிலையான வைப்புத் தொகைகள் வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களுக்குப யன்படுத்தப்படும். | மிகை நிதியை பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருட் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட பொருட்கள் குறைபாடு தொடர்பாக 2021 மார்ச் 21 ஆந் திகதி மேற்கொண்ட நி.பி. 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 05 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 461,654 பெறுமதியான தொகையை அறவிடுவதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 432,404 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக நி.பி 104(4) பரிசோதனை அறிக்கை உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக. | நி.பி 104(4) பரிசோதனை அறிக்கையின் பரிந்துரைகள் விரைவில் செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தம்புள்ளை விஹாரைச் சந்தியின் புனித தளத்திற்கு அருகில் வாகன நிறுத்துமிடத்தில் 2005, 2006 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவையில் உள்ள ரூபா 1,029,121 கேள்விக் கட்டணத்தை அறவிடப்படாமை தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 104(4) இன் பிரகாரம் பரிசோதனை நடத்தி தொடர்புடைய பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 104(4) பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ள தாக. | நி.பி 104(4) இன் பிரகாரம் பரிசோதனை நடத்தி தொடர்புடைய பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படவில். |
| (இ) | சபை நிலைபேறான அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்திச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் இலக்குகள் மற்றும் காலச் சட்டகம் ஒன்று இல்லாமல் தயாரிக்கப் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க உள்ளதாக. | நிலைபேறான அபிவிருத்தித நோக்கங்களை இனங்கண்டு எதிர்பார்த்த இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பட்டிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | | |

**3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட ரூபா. 2,450,000 ஆகவிருந்த 04 வாகனங்கள் 06 வருடங்கள் முதல் 17 வருட காலமாக பயன்பாடற்ற வகையிலும் குறைபயன்பாடுடனும் காணப்பட்டன. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் வாகனங்களுக்கான சாரதிகள் இல்லாததன் காரணமாக பயன்பாட்டில் சிக்கல்கள் காணப்படுவதாக. | சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையால் பயன்படுத்துகின்ற 56 மயானங்கள் சனசமூக நிலையங்கள் அமைந்துள்ள 69 காணிகள் 21 விளையாட்டு மைதானங்கள், அலுவலகக் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணி, சீகிரிய வாகன நிறுத்துமிடம் மற்றும் வேவல வாரச்சந்தை அமைந்துள்ள காணி என்பவற்றின் உரித்தினை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டாம் மட்டத்தின் 04 பதவிகளுக்குரிய 13 உத்தியோகத்தர களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன் ஆரம்ப தரத்தின் 06 பதவிகளுக்குரிய 11 உத்தியோகத்தர் களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பதிலாக போதியளவு உத்தியோகத்தர்கள் இணைக்கப்படாமை மற்றும் சில பதவி களுக்காக இடமாற்றத்தின் கீழ் உத்தியோகத்தர் வழங்கப்படாமை காரணமாக வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |